Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 19 சனிக்கிழமை (05-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 231

# தமிழ் அமைப்புகளின் ஐக்கியத்துக்கு அழைப்பு விடுக்கிறார் தேவானந்தா!

## ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்து செயற்படவும் அவர் வலியுறுத்து

கொழும்பு, ஒக்ரோபர் 05

ஈழத் தமிழ் இனம் இன்று முக்கியமான ஒரு காலகட்டத்தில் இருக்கின்றது. எமது உரிமைகளை நாம் வென்றெடுத்து இனப் பிரச்சினைக்கு நீதியான தீர்வைப் பெறுவதற்கு கட்சி, இயக்க வேறுபாடின்றி நாம் ஒன்றுபட்டு – விட்டுக்கொடுத்து – ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்துச் செயற்பட வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக்கூட்டணி முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் வரை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே எமது இலட்சியத்தை அடையமுடியும்.

– இவ்வாறு ஒன்றிணைய அழைப்பு விடுத்திருக்கின்றார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

கொழும்பில் இருந்து உதயன் அரசியல் செய்தியாளருக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இந்த அழைப்புப் பற்றிய அறிவிப்பைப் பிரஸ்தாபித்தார்.

தமிழ்க் கட்சிகளின் ஐக்கியத்துக்கு முதற்படியாகவே ஈ.பி.டி.பி., ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.

தமிழ்க் கட்சிகள், குழுக்கள் ஒன்றுபட்டிருந்தால் யாழ் குடாநாட்டையும் கிளிநொச்சியையும் அரசுப்படைகள் கைப்பற்றுவதைத் தவிர்த்திருக்கலாம் என்றார் அவர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிராக இனி 'காட்டு யுத்தம்'

## அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 5

அரச படைகளால் கிளிநொச்சி நகரம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் காடுகளுக்குள் சென்றுவிட்டனர். எனவே இனி நடக்கப்போவது காட்டு யுத்தம்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

காடுகளுக்குள் நுழைந்துள்ள விடுதலைப் புலிகளை துரத்தி அழிக்கும் புதிய திட்டங்கள் தயார் என்றும் அவர் கூறினார்.

புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும் தற்போதைய நிலையில் ராணுவ நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டால் முல்லைத்தீவில் செய்தது போன்று புலிகள் ஒன்று திரண்டு பெரிய தாக்குதல்களை நடத்த வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்காக ராணுவம் கிளிநொச்சி முகாமில் தங்கி இருப்பதற்குப் பதிலாக புலிகள் மீதான தாக்குதலை தொடர்ந்து நடத்தி ராணுவ ரீதியில் புலிகளைத் தோற்கடிக்கும். புலிகளைத் தோற்கடித்த பின்னரே அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்களுடன் கலந்து பேச எண்ணி உள்ளோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்,

யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை ஒன்றைத் திறப்பது புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கும் இராணுவத் தேவைகளுக்கும் இன்றியமையாதது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-10)

## இலங்கையில் தமிழர் கொலைகுறித்து

# கருணாநிதி மீண்டும் கவலை தெரிவிப்பு

சென்னை, ஒக். 5

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு தமிழக முதல்வர் மு. கருணாநிதி மீண்டும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போர் அதன் உள்நாட்டு விவகாரம் என்பதால் தாம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்றாலும் நல்லதொரு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதே தமது அவா என்றும் அவர் கூறினார்.

தஞ்சையில் நேற்றுக் காலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கை அகதிகள் தமிழகம் வருவது குறித்து மாநில அரசு மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது என்றும் கூறினார். (இ-3-4)

## கற்பிட்டியில் மீனவர்கள் கடத்தல்

கொழும்பு, ஒக். 5

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி என்ற இடத்தில் இரு மீனவர்கள் அவர்களது வள்ளங்களுடன் கடத்தப்பட்டுள்ளனர்.

வில்பத்து சந்திக்கு அருகில் உள்ள வாவியில் அவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-3)

## இரு நீதிமன்றங்களில் மாறி மாறி

# ராவைக் கைது செய்யும் உத்தரவும் அதற்கு தடையும்!

புதுடில்லி, ஒக் 5

செயின் கிட்ஸ் போலி ஆவண வழக்கில் முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கும் மற்றும் மூவருக்கும் எதிராக பிணையில் விட முடியாத கைது வாரண்ட் உத்தரவை புதுடில்லி பெருநகர மாஜிஸ்திரேட் பிரேம்குமார் நேற்று விடுத்தார்.

எனினும் இதனை ஆட்சேபித்து நரசிம்மராவ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்று மேற்படி மாஜிஸ்திரேட் நீதிமன்ற உத்தரவை இடைநிறுத்து புதுடில்லி மேல் நீதிமன்றம் நேற்றுப் பிற்பகலில் உத்தரவு ஒன்றை வெளியிட்டது.

நரசிம்மராவ் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் கே.கே. திவாரி, அமுலாக்கல் அலுவலகத்தைச் சேர்ந்த முன்னாள் அதிகாரி கே.எல். வர்மா மற்றும் அமெரிக்க பிரஜையான லாறி ஹோல் ஆகியோரைக் கைது செய்யும் உத்தரவையே மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தற்போது விளக்கமறியலில் இருக்கும் சந்திரசுவாமி, அவரது உதவியாளர் கைலாஷ்நாத் அகர்வால் ஆகியோரையும் இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். இவர்கள் இருவரும் லகுபாய் பதக் மோசடி வழக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருப்பது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எந்த விசாரணையையும் நான் எதிர்நோக்கத் தயார்

## ஜெயலலிதா நேற்று அறிக்கை

சென்னை, ஒக் 5

தமக்கு எதிராக மத்திய, மாநில அரசுகள் நடத்த உத்தேசித்திருக்கும் எந்த விதமான விசாரணையையும் எதிர்நோக்க தாம் தயாராக இருப்பதாக தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், தம் மீது ஆதாரமற்ற பொய்யான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

சென்னையில் உள்ள முதன்மை செஷன் நீதிமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராக எவ்.ஐ.ஆர் எனப்படும் முதல் தகவல் அறிக்கையை சி.பி.ஐ. நேற்று முன்தினம் தாக்கல் செய்திருந்தது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே, தாம் எந்த விசாரணையையும் எதிர்நோக்கத் தயாராக இருப்பதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (இ-3)

# மட்டக்களப்பில் மோதல்

கொழும்பு, ஒக். 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பலாடிவற்றையில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

இந்த மோதல்களின் பின்னர் படையினர் இரு சடலங்களையும் மற்றும் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# அம்பாறைப் பகுதியில் 2 தாக்குதல் சம்பவங்கள்

கொழும்பு, ஒக். 5

அம்பாறை மாவட்டத்தில் அறந்தலாவையில் இடம் பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் அதிரடிப்படையினர் மீதும் ஊர்காவல் படையினர் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அம்பாறை — கண்டி வீதியில் ரோந்து சென்ற சமயமே ஊர்காவல் படையினர் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலில் சில ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் போறபொல இராணுவ முகாமைச் சேர்ந்த அதிரடிப்படையினர் அறந்தலாவைக்கு ரோந்து சென்ற சமயம் புலிகளின் கிளைமோர் கண்ணிவெடிக்கு உள்ளாகினர். எனினும் சேத விவரம் தெரியவரவில்லை. (இ-3)

## ஆசிரியர் தினம் 06-10-96

எங்கள் பேரறிவாளர்கள் அமைதியின்மையிலும் உள உறுதியுடன் மண்வாசனையோடு கலையும் பண்பாடும் மிளிர, கல்விசார் வெற்றிகளைக் கவினுறப்பெற; தொழிலாகத் தம்மை அர்ப்பணித்தனர். இன்பங்களைத் துறந்து 'குரு' இலட்சியத்துக்காக உதாரண புருஷர்களாக உயர்வாகவே வாழ்கின்றனர். அறிவும் விவேகமும் நிரம்பித் ததும்ப நித்திலங்களை உருவாக்குகின்றனர். கல்விச் சுழலில் விளையாட்டு, சமூக ஊடாட்டம் ஆகியவற்றினால் மாணவ, மாணவிகளின் "ஒழுக்கம்" காலம் தவறாததன்மை, நேர்மை, ஆளுமை, தன்னம்பிக்கை, செல்லும் இடங்களில் செல்வாக்கு ஆகிய நற்பண்புகளை வளர்க்கின்றனர். "இது காலத்தின் தேவை" இந்நன்னாளில் அதிபர்கள், ஆசிரியர்கள், பாலர் பாடசாலை, சேவையாகப் பணிபுரியும் இளைப்பாறியஆசிரியர்களையும் கல்வி அங்கத்தவர்களையும் நெஞ்சார வாழ்த்துகின்றோம் பாராட்டுகின்றோம்.

திரு. திருமதி க. அருந்தவராஜா
(சர்வதேச சென்ஜோன் அம்புலன்ஸ் படையினர்)

(43023)

## பாரதி

சித்தன்கேணி

5 ஆம் ஆண்டு
புலமைப்பரிசில்
வகுப்பு

தற்பொழுது ஆண்டு 4 கற்கும் மாணவர்களுக்கு
புதிய பிரிவு ஆரம்பம்
05-10 96 சனி 3-00 மணி
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

ஆசிரியர்
திரு. க. கனகசபை
(ஓய்வுபெற்ற அதிபர்)

(43020)

## மழை தாமதிப்பதால் விதைப்பும் தாமதம்

பருவ மழை பிந்துவதால் பல விவசாயிகள் பயிர் நிலங்களைப் பண்படுத்தி விட்டு விதைப்புக்காக காத்திருக்கின்றனர்.

அதே சமயம் விதைநெல்லை பெற்ற சிலர் புழுதி விதைப்பு செய்து விட்டு மழைக்காக காத்திருக்கின்றனர்.

அடுத்து வரும் நாள்களில் மழை பெய்யத்தவறின் புழுதி நெல் பழுதடைந்து விடும் என அவர்கள் கவலை கொண்டுள்ளனர். (இ-152)

## வெகுஜன தொடர்புக் கலை பயிற்சி நெறி

### A CERTIFICATE COURSE IN MASS COMMUNICATION

ஆரம்பம்:- **07-10-96**

### 6மாத காலப் பயிற்சி

க. பொ. த. சாதாரணதரத்தில் தமிழ்ப்பாஷை உட்பட 6 பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம். 50 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் வழங்கப்படும்.

விவரங்களுக்கு:

பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

காங்கேசன்துறை வீதி,
சம்பியன் லேன் முன்பாக,
கொக்குவில்.

73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/3227)

## மரண அறிவித்தல்கள்

### சுவக்கின் பொன்னுத்துரை

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பங்கைச் சேர்ந்த சுவக்கின் பொன்னுத்துரை 04-10-96 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிறீலம்மாவின் அன்புக் கணவரும், செபமாலையம்மா, சில்வெஸ்ரர் (மின்சார சபை, நெல்லியடி), பத்மராணி (பிரான்ஸ்), அலோசியஸ் (யாழ் மாநகரசபை), அருள்நேசன் (ஆசிரியர், கிளிநொச்சி மகாவித்தியாலயம்), அமரநேசன் (தெ. ப. பொ. அபிவிருத்திச்சபை), லூத்செல்வராணி, கொன்ஸ்ரன்ரைன் (பிரான்ஸ்), சுனிஸ்ரஸ் ஜீவா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மதுரநாயகம், றெஜீனா, பொன்ராசா (பிரான்ஸ்), மெற்றில்டா, வசந்தி (ஆசிரியர், கிளிநொச்சி மகாவித்தியாலயம்), புனிதம், ஜெயரட்ணம் (குவைத்), கருணாமலர் (பிரான்ஸ்) ஆகியோரின்அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 05 - 10 - 96 சனிக்கிழமை (புதிய நேரம்) பி. ப. 3-00 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. சில்வெஸ்ரர்
(மகன்)

ஆசீர்வாதப்பர் கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(43018)

### இயக்கோமுத்து ஞானம்மா

(சில்லாலை தெற்கு)

சில்லாலை தெற்கைச் சேர்ந்தவரும் தற்சமயம் 26, கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய இயக்கோமுத்து ஞானம்மா 4-10-96 இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்துவின் அன்பு மனைவியும் ஹென்றியோசெப் (புகையிரத நிலைய அதிபர், லண்டன்), புவிராசசிங்கம் (தொழினுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, சாவகச்சேரி, சரசாலை உப அலுவலகம்), இராஜநாயகம் (தொழினுட்ப உத்தியோகத்தர், தேசிய நீர் வழங்கல் வடிகால்சபை, யாழ்ப்பாணம்), பீற்றர் கனியூட் (சுவிற்சலாந்து), அருளானந்தம் (சுவிற்சலாந்து), திருமதி டெய்சி ஜீவரட்ணம், காலஞ்சென்ற பற்றிக் இம்மானுவேல், ஜோண் பொஸ்கோ (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சம்சுன், காலஞ்சென்றவர்களான மேரி பற்றிமா, யோகறஞ்சினி (உரிமையாளர்கள், பிரபாகர் பார்மசி, முல்லைத்தீவு), விவியன், இமெல்டா, இந்திரா, ஸ்ரெலா, ஜீவரட்ணம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பூநகரி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி. டெய்சி ஜீவரட்ணம்
(மகள்)

26, கதீட்ரல் வீதி,
யாழ்ப்பாணம்.

(43028)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**1994/95 ஆம் கல்வி ஆண்டுக்கான சித்த மருத்துவப் பிரிவுக்கு புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்.**

மேற்குறிக்கப்பட்ட கற்கை நெறிக்கு தெரிவானோர் தம்மை 1996-10-7 ஆம் திகதி பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள், அவற்றின் நிழற்படப் பிரதிகள் என்பவற்றுடன் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. பிறப்புச் சான்றிதழ்.
2 பாடசாலை விடுகைப் பத்திரம்.
3. க. பொ. த (உயர் தரம்) பரீட்சை சான்றிதழ்.
4. புகைப்படப் பிரதிகள் – 8
5. தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியும்.
6. செலுத்த வேண்டிய கட்டணங்கள்:–
   அ. பதிவுக் கட்டணம் 150/-
   ஆ. ஆய்வுகூடக் கட்டணம்- 100/-
   இ வைத்தியக் கட்டணம்- 50/-
   ஈ. மாணவர் கைநூல் - 25/-

— பதிவாளர்
1996-10-04

(சி/32 ) )

உ
சர்வம் சிவமயம்

## ஆசிரியர் தினம் 06- 10-96

### சேவை நலம் பாராட்டல்

**யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்**

நற்சேவையாற்றும் அதிபர் உயர் சைவத்திரு ஆ. சி. சோதிலிங்கம் அவர்களுடன் இணைந்து இந்தப்பாடசாலைக்கு அளப்பரிய பணிபுரியும் ஆசிரியர்களையும், முன்னர் இவ் வித்தியாலயத்தில் சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களையும் உள்ளன்போடு நன்றி பாராட்டி மனமார வாழ்த்துகின்றோம்.

நாளை ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9- 00 மணிக்கு நடைபெறும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழாவில் பாடசாலைச் சமூகத்தினரை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
வணக்கம்!

" எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க !!"

ஷி வித்தியாலய
அபிவிருத்திச் சபை.

05- 10- 96 (சி- 3228)

### செல்லையா நடராசா

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் சாவகச்சேரியில் வசித்தவருமாகிய செல்லையா நடராசா 03-10-96 வியாழக்கிழமை காலை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காந்திமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை செல்லையா, அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்ற செல்லப்பா—ஞானமுத்து தம்பதியரின் அருமை மருமகனும், ராஜதேவி, சிறீதேவி, ஜெகதேவி, வனஜாதேவி, தவராசா, தாமராதேவி, சுமித்திராதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயா, இராசலிங்கம், இராசரத்தினம், அர்த்தநாதீஸ்வரன், விக்னகுமார், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரசாமி, மதியாபரணம், படைவீரசிங்கம், மகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன், மகேசன், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்ஜீவன், விக்ரர், தபீதரன், சாருஜன், வாமணன், பிரணவன், சபீனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.10.96) ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 2-30 மணிக்கு பொறள்ளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி நடராசா காந்திமதியும்
பிள்ளைகளும்

'நுணாவில் கிழக்கு'
சாவகச்சேரி.

(43027)

பயிற்சிகள் - உன்னத நிலைக்கு - உயர்த்தும்

## G.C.E. A/L

**கணித, உயிரியல், கலை, வர்த்தக பிரிவுகள்**

எல்லாப் பாடங்களுக்குமாக

**வாரம் 1 பாடம் – ஒவ்வொரு மாதமும் 4 பாடங்கள்**
**புதிய பாடத்திட்டத்திற்கமைய – பயிற்சிப் பரீட்சைகள்**

★ விரும்பிய எவரும் இப்பரீட்சைகளுக்குத் தோற்றலாம்.
★ பரீட்சைக்குத் தோற்ற போக்குவரத்து, நேர வசதி இல்லாதவர்கள் தபால் மூலம் தொடர்பு கொண்டு, வீட்டிலிருந்தபடியே இப் பரீட்சைகளுக்குத் தோற்றலாம்.
★ விடைத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளியிடும் திட்டத்துடன் (Marking Scheme) மீளளிக்கப்படும்.

ஆரம்பம்: **06 – 10 – 1996** ஞாயிறு

மேலதிக விவரங்களுக்கு:-
**பரீட்சைப் பகுதி - BOND INSTITUTES**
தபால்பெட்டி: 140,

பதிவாளர்
யாழ்ப்பாணம்.

(43029)

யாழ்ப்பாணம் பொது நூலகம்.

# ஜெருஸலத்தில் பெருமளவு இஸ்ரேல் படைகள் குவிப்பு

## பலஸ்தீனர் புதிதாக கலவரத்தில் இறங்கலாம் என அச்சம்

ஜெருஸலம், ஒக். 5
வாஷிங்டனில் நடைபெற்ற இஸ்ரேல் — அரபு உச்சி மாநாடு முன்னேற்றம் எதுவும் இன்றி முடிவடைந்ததை அடுத்து, பலஸ்தீனர்கள் கலவரத்தில் இறங்கலாம் என எதிர்பார்த்து சுமார் மூவாயிரம் இஸ்ரேல் துருப்புக்கள் பலரை ஜெருஸலத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

பழைய ஜெருசலத்தில் உள்ள அல். அக்ஸா பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற ஜூம் ஆத் தொழுகையை அடுத்து பலஸ்தீனர்கள் கலவரத்தில் இறங்கலாம் என்று இஸ்ரேல் எதிர்பார்க்கிறது.

அல் - அக்ஸா பள்ளிவாசலில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இஸ்ரேல் படையினர் மூன்று பலஸ்தீனர்களை சுட்டுக் கொன்றிருந்தனர்.

அதேசமயம் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுக்கள் முன்னேற்றம் எதுவும் இன்றி முடிவடைந்ததைத் தொடர்ந்து இஸ்ரேல் எல்லையில் உள்ள காஸாவில் நாளை ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பேச்சுக்கள் நடைபெற உள்ளன.

வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுக்களில் இஸ்ரேல் பிரதமர் நத்தானியாகோ பலஸ்தீன தலைவர் யாஸிர் அரபாத், ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பேச்சுக்களில கலந்துகொள்ள மறுப்புத் தெரிவித்திருந்தார்.

எனினும் தனது வெளிவிவகார அமைச்சரை அவர் வாஷிங்டனுக்கு அனுப்பி இருந்தார்.

இஸ்ரேல் பிரதமர் நத்தானியாகோவின் கடினமான போக்கே வாஷிங்டன் உச்சிப் பேச்சுக்கள் தோல்வி அடையக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பழைய ஜெருஸலத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் ஊடாக உல்லாசப் பயணிகள் சுரங்கப் பாதை ஒன்றை

(4ஆம் பக்கம் பார்க்க)

முஜிபுர் கொலை தொடர்பாக

# முன்னாள் அமைச்சர் பங்களாதேஷில் கைது

டாக்கா, ஒக் 5
'வங்கச் சிங்கம்' முஜிபுர் ரஹ்மானைப் படுகொலை செய்தது தொடர்பாக பங்களாதேஷ் முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் நவாதீன் தாவுக் அந்நாட்டுப் பொலிசாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

1975 இல் முஜிபுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டதற்கும் இவருக்கும் தொடர்புள்ளது எனப் பொலிசார் சந்தேகப்படுகின்றனர்.

(இ-10)

# பச்சைக் காய் கறி வகைகள் இருதயநோயைத் தடுக்கும்

தினமும் சுத்தமான பச்சைக் காய்கறி வகைகளை உண்பதால் மாரடைப்பு மற்றும் இருதயம் தொடர்புள்ள நோய்களால் உண்டாகும் இறப்புக்கள் தடுக்கப்படுகின்றன என பிரிட்டிஷ் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 17 ஆண்டுகளாக பிரிட்டிஷ் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மருத்துவரான திமோத்தியும் மற்றும் பல மருத்துவர்களும் ஆராய்ச்சி ஒன்றினை நடாத்தினர்.

சுமார் 10, 771 பேரைச் சந்தித்து பேட்டிகண்டு ஆராய்ந்ததில் 49 சத வீதத்தினர் சைவ உணவு உண்பவர்கள் எனவும் இதனால் இருதயக் கோளாறினால் ஏற்படும் இறப்பில் 74சத வீதம் குறைந்துள்ளது எனவும் பக்கவாத நோயின் பாதிப்பு 32சதவீதம் குறைந்துள்ளது எனவும் தெரிய வந்துள்ளது.

(இ-10)

# சிறுவர் அடிமைத் தொழில் பர்மா முன்னணியில்

ரங்கோன், ஒக். 5
குழந்தைகள், சிறுவர்கள் அடிமைத் தொழிலின் உலகத் தலைநகரம் பர்மா என சர்வதேச குழந்தைகள் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

15 வயதுக்குக் குறைவான குழந்தைகள் உட்பட சுமார் 60 லட்சம் குழந்தைகள், சிறுவர்கள் பர்மாவில் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்றும், ஆண்டு தோறும் சுமார் 10 ஆயிரம் சிறுமியர்கள் விபசாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

(இ-10)

# வெளிநாட்டவர்களை கண்காணிக்க பொலீஸ்பிரிவு

## சிங்கப்பூர் அரசு நடவடிக்கை

சிங்கப்பூர், ஒக். 5
சிங்கப்பூரிலுள்ள வெளிநாட்டவர்களைக் கண்காணிக்க விசேட பொலிஸ் பிரிவை சிங்கப்பூர் அரசு உருவாக்கியுள்ளது.

சட்டவிரோதமாக சிங்கப்பூரில் தங்கி பணியாற்றி வரும் வெளிநாட்டவர்களையும் — வெளிநாடுகளிலிருந்து வந்து சிங்கப்பூரில் மறைந்திருக்கும் குற்றவாளிகளையும் — கண்டுபிடிக்கும் நோக்கிலேயே இந்த விசேட பொலீஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது என ''ஸ்ரேற் ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவிக்கிறது.

சிங்கப்பூரில் வாழும் சுமார் 30 இலட்சம் மக்களில் சுமார் 3இலட்சத்து 50ஆயிரம் வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக அந்த நாட்டில் தங்கியுள்ளனர் என கூறப்படுகிறது.

(இ-10)

# உலக அரங்கில்

## இலக்கிய துறைக்கான நோபல் பரிசு

ஒஸ்லோ, ஒக். 5
1996 ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு போலந்து நாட்டைச் சேர்ந்த கவிஞரும் புத்தக விமர்சகருமான இஸ்லாவா சிவொஸ்கா என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசு சுமார் 11 லட்சத்து 20 ஆயிரம் டொலர் பெறுமதியானதாகும்.

(இ-10)

## றுவாண்டா படுகொலை விசாரணை

றுவாண்டாவில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றிய விசாரணைக் குழுவில் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த பெண் நீதிபதி வாணிப்பிள்ளை என்பவரும் இடம் பெற்றுள்ளார். இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.

1994 ஆம் ஆண்டில் றுவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலைகளில் சுமார்8 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள 7 நீதிபதிகள் கொண்ட குழுவை ஐ. நா. நியமித்துள்ளது.

# ரூ.20 இலட்சம் நட்டஈடு கோரி ஐ. தே. க வழக்கு

கொழும்பு, ஒக். 5
ஐக்கிய தேசியக்கட்சியின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற விழாவுக்கு பாதுகாப்பு வழங்க மறுக்கப்பட்டதற்கு எதிராக அரசாங்கத்திடமிருந்து 20 இலட்சம் ரூபா நட்ட ஈடு கோரி தீர்கொழும்பு நகர பிதா நிக்கலஸ் பெர்ணான்டோ தாக்கல் செய்துள்ள மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு நேற்று மேல் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது.

(இ-10)


## அனைவருக்கும் உளநலம் - 05

### குடும்பநலம் - உறுப்பினர் ஒத்திசைவில்

- ★ குடும்பம் — தனியொருவரது அத்திவாரமாகவும், சுய அடையாளத்தின் உறைவிடமாகவும் உள்ளது.
- ★ சுதந்திரமான கருத்துறவாடல் ஆரோக்கியமான குடும்பத்தின் ஓர் அம்சம்.
- ★ குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாய், உறுதுணையாய், தூண்டுதலாய் இருக்க குடும்பநலம் உயர்ந்தோங்கி மலரும்.
- ★ குடும்பம் சமூகத்துடன் இணைந்த, திறந்த மாறும் அமைப்பாக இருத்தல் நன்று; இத்தகைய மாற்றம் உளவியல் வளர்ச்சிக்கு உந்துதலாக அமையும்.
- ★ குடும்பத்தின் இயக்கம் ஆரோக்கியமற்றதாக இருக்கும் பொழுது, அதன் உறுப்பினர்களின் உளநலம் பாதிப்படையலாம்.
- ★ குடும்பம் நோய்ப்பட, சமூகம் நோயுறும்.

AHC


# யாழ். வருவதற்கான கப்பல் பதிவு மறு அறிவித்தல்வரை இடை நிறுத்தம்

## காங்கேசன்,தீவுப் பகுதி பயணிகள் வருகை தாமதமாகும்

கொழும்பு, ஒக். 5
கப்பலில் யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவிலும் திருகோணமலையிலும் பெரும் எண்ணிக்கையானோர் காத்திருப்பதால் தீவுப்பகுதி, காங்கேசன்துறைப் பகுதியைச் சேர்ந்த பயணிகளின் பதிவு மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டிருப்பதாக பட்டணமும், சூழலும் பகுதிக்கான பிரதேச செயலர் வி. வேலும் மயிலும் தெரிவித்துள்ளார்.

தற்போது திருமலையில் இருந்து மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்துள்ளனர். வவுனியாவிலும் ஏராளமானோர் காத்திருக்கின்றனர்.

வவுனியா பயணிகள் உட்பட ஏற்கனவே பதிவு செய்த இவர்கள் அனைவரையும் அனுப்பி வைக்க வேண்டுமானால் 3 மாத காலம் வரை செல்லலாம்.

எனவே தான் பயணிகள் பதிவு இடைநிறுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

(இ-3)

## இயங்காத பாடசாலைகள்

வலி. தென்-மேற்கு ஒக்5
சங்கானை கல்விக்கோட்டப்பிரிவில் இரு பாடசாலைகள் செயற்பட வில்லை.

திருவடி நிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையும் காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் செயற்படவில்லை என்று கோட்டக்கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகள் மக்கள் அற்ற சூனியப் பிரதேசமாக இருப்பதனால் இவை இயங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சில பகுதிகளில் சன அடர்த்தி குறைந்திருப்பதனால் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை மிகக்குறைவாக இருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(இ-145)

## வலயம் -2 பணிப்பாளர் நியமனம் இன்னும் இல்லை

வலயம் — இரண்டின் கல்விப்பணிப்பாளருக்கான வெற்றிடம் நிரப்பப்படாததனால் இப்பகுதிக்குரிய கல்வி அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்பட்டுவருவதாகக் கல்வி வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

தற்போது வலயம் இரண்டின் கல்விப் பணிகளை வலயம் ஒன்றின் பணிப்பாளரே கவனித்து வருகின்றார்.

இவரது அலுவலகம் யாழ். நகரில் இயங்குவதனால் சில முக்கிய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இந்தவலயத்துக்குஉட்பட்ட பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி மிகமந்த நிலையிலேயே இருந்து வருகிறது என்றும் —

பல மாதங்களாக மேற்படி பணிப்பாளருக்கான வெற்றிடம் நிரப்பப்படாமல் இருப்பதனால் ஆசிரியர்களின் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-145)

## உள்ளூராட்சி ஒய்வூதியம்

யாழ்ப்பாணம் ஒக். 5
உள்ளூராட்சி ஒய்வூதியருக்கான செப்டெம்பர் மாத ஒய்வூதிய வவுச்சர்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## தொப்பிக்கல காட்டுப்பகுதியில் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம், தொப்பிக்கல காட்டுப்பகுதியில் உள்ள புலிகளின் முகாம்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிவரம் முழுமையாகத் தெரியவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-10-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் பின்வரும் கால் நடை மருந்து வகைகள் நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். ரிலொக்ஸ், தயாகல், பிக்குற்றின். தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/3223)

வீட்டுத் தளபாடங்கள், பைல், கபினற், தையல் மெசின்கள், மின்சாரப் பொருள்கள், அன்ரனா, பூஸ்ரர் வகைகள், கிளாஸ், செரமிக் பொருள்கள், ரேடியோ, சைக்கிள், மிருதங்கம், Sharp டெக், பணவைப்புப் பெட்டி (இரும்பு) விற்பனைக்கு உண்டு. யோ. யோண்சிங்கம், இல:- 226 (104), பிரதான வீதி, யாழ்ப்பாணம். (43010)

## பயிற்சி வினாத்தாள்கள்

செப்ரெம்பர் மாத 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்பு எல்லா பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன்பெற்றுக்கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (42921)

## இலவச திருமணசேவை

அரசாங்க உத்தியோகம் 30 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. ஞாயிறு மட்டும் 9.30 — 12.30 ஸ்ரீலங்கா அச்சகத்துக்கு அருகில் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (43004)

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி - கண்டி வீதியில் (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு இல; B; 23, கச்சாய் றோட், சாவகச்சேரி. (42999)

## பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 3 முதல் O/L வரை சகல பாடங்களுக்கான மாதாந்த பரீட்சை 05-10-96 — 06-10-96 வரை நடைபெறும். வெளிமாணவர்களும் தோற்றலாம் 07-10-96 இற்குப் பின் வினாத்தாள்கள் வெளிவிடப்படும். புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43015)

---

வெளிவந்துவிட்டது!

**A/L** வகுப்புப் புதிய பாடத்திட்டத்துக்குரிய

# உரைநடைக் கோவை

(ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தொடக்கம் ஏ. என். சிவராமன் வரையுள்ள பதினைவரின் கட்டுரைத் தொகுப்பு)

**1997** ஆம் ஆண்டு முதல் நடைபெறும் தேர்வுக்குரியது.

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

(42998)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னப்பு சின்னத்துரை

(முன்னாள் கணேசா ஸ்ரோர்ஸ் மனேஜர்)

தோற்றம்: **03 – 08 – 1918**  திதி: **05 – 10 – 1996**

எமது உயிரே எங்கள் அப்பா
வடிவு கொண்ட ஓவியமே நெஞ்சமெல்லாம்
நெருப்பாக நினைவெல்லாம் உங்களுக்காக
வேதனையால் வெதும்புகின்றோம்.
பூவுலகில் எமைக் காத்தது போல
மேலுலகிலிருந்து எமை ஆசீர்வதியும் ஐயா.

அன்பு மனைவி அருமை மக்கள்
மருமக்கள், பேரர்கள்.

" ஞான வாசா "
ஊரங்குனை, ஏழாலை. (4301I)

---

# தேவைக்கு அதிகமான வெங்காயம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக் 5

குடாநாட்டில் விவசாயிகள் உற்பத்தி செய்த வெங்காயத்தை யாழ் மாவட்ட விவசாய அபிவிருத்திச் சங்கம் கொள்வனவு செய்து வெளியிடங்களுக்கு அனுப்பவிருப்பதாக வடமாகாண மீள்குடியேற்ற அதிகார சபைத்தலைவர் சோமபாலா குணதீர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

★ யாழ்ப்பாணத்தில் விளைந்துள்ள 5 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வெங்காயத்தை அடுத்த போக செய்கைக்கு வைத்திருத்தல்.

★ விவசாயிகளிடம் இருந்து ஒருகிலோ வெங்காயம் 20 ரூபாவுக்கு கொள்வனவு செய்தல்.

★ குடாநாட்டுக்குதேவையான வெங்காயத்துக்கு மேலதிகமான வெங்காயத்தை யாழ் மாவட்ட விவசாய அபிவிருத்திச் சங்கம் கொழும்பில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்தல். (இ-3)

## ஜெரூஸலத்தின் . . .

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கும் இஸ்ரேலின் நடவடிக்கையை அடுத்து பலஸ்தீன சுயாட்சி நடைபெற்றுவரும் மேற்குக் கரையிலும் காஸாவிலும் வன்முறைகள் இடம்பெற்று வருவது தெரிந்ததே.

இதனை அடுத்தே வாஷிங்டன் உச்சிப் பேச்சுக்களை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஏற்பாடு செய்திருந்தார். (இ-10)

---

# திருமறைக் கலா மன்றம்

★ கலைஞர் ஒன்று கூடல்
★ "தொடுகை"

கையெழுத்துச் சஞ்சிகை அறிமுகம்

சிறப்புரை: திரு. சசி கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
காலம்: **06 — 10 — 1996** ஞாயிறு
நேரம்: காலை **11. 30** ( புதிய நேரம் )
இடம்: மன்ற கேட்போர் அரங்கு

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலா மன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (43022)

---

# ரொபி, இனிப்பு தயாரிப்பாளர் கவனத்திற்கு!

எங்களிடம் லிக்குவிட் (LIQUID) குளுக்கோஸ் கைவசம் உள்ளது. தேவையானோர் எங்களிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
சிவா நறுமண பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (43009)

---

# மொடேர்ன் எடியுகேசன் சென்ரர்

நெல்லியடி

**07 - 10 - 96** பகல் நேர **A/L** வகுப்புகள் ஆரம்பம்

| | |
|---|---|
| தூயகணிதம், பிரயோககணிதம் | திரு. வெக்டர் வேலாயுதம் |
| இரசாயனம் | திரு. வசீகரன் |
| பௌதிகம் | திரு சூரியநாதன் |

திங்கள் 8 - 30 மணி தூய பிரயோககணிதம்

(43016) நிர்வாகி

---

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ். கிளைத் தலைமையகத்தில் கடமையாற்றும்
திரு. செ. நிற்கந்தா
அவர்களின் சகோதரன்

## செல்லத்துரை காங்கேயன்

(லிகிதர், பிரதேச சபை அலுவலகம், வட்டுக்கோட்டை)
அவர்களின்

மறைவுக்காக எமது மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை இத்தால் செலுத்துகிறோம்.

செஞ்சிலுவைச் சேவையில்
ஊழியர், உறுப்பினர், தொண்டர்கள்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-3226)

---

நகரசபை சாவகச்சேரி

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் திருத்த வேலைகளுக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இரு பிரதிகளில் **23 - 10 - 96**ஆம் திகதி மு. ப. 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் மு. ப. 10-15 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

| திருத்த வேலைகளின் விவரம் | வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1. சாவகச்சேரி பஸ் நிலைய பொதுக் கிணறு திருத்தம் | ரூபா **1000.00** | ரூபா **500 00** |
| 2. சாவகச்சேரி சந்தை கழிவுநீர் வடிகால் திருத்தம் | ரூபா **1000.00** | ரூபா **500.00** |

மேற்படி வைப்புப் பணம், கேள்விப் படிவக் கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில் **18-10-96** பகல் 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா.

சித்திகர கேள்விக்காரர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நடராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 03-10-96. (சி-3225)

உதயன்

## தடை தாண்டல்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. எமது இந்த முயற்சிகளில் ஏற்படும் தடைகளைக் கண்டு நாம் பின்வாங்கப்போவதில்லை. -

அமெரிக்காவில் — நியூயோர்க்கில் — ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் ஒன்றில் பேசிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கத் தரப்புக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் இன்னும் கருத்திணக்கம் காணப்படவில்லை.

அரசமைப்புத் திருத்தம் பற்றி ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறுவதில்லை என்று ஐ.தே.கட்சி முடிவு செய்த போதிலும் —

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கக் கூடியதான ஒரு தீர்வுக்கு ஐக்கிய தேசியக்கட்சி இணங்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

அது ஒளித்துப்பிடித்து விளையாடும் உத்தியையே தொடர்ந்து கைக்கொள்ளுகின்றது.

அரசாங்கத்தின் உத்தேசத் தீர்வு தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றப் பின்னிற்கிறது என்று தமிழ் அரசியல் கட்சிகள் கருதுகின்றன. அதனால் அவற்றுக்கும் அரசுக்கும் இடையிலும் கருத்திணக்கம் இல்லை. அத்தகைய கருத்திணக்கம் ஒன்று உருவாகும் என்று நிச்சயமாகச் சொல்லக்கூடியதாகவும் இல்லை

அரசு உத்தேசித்துள்ள பிராந்திய சபைக்குள் முஸ்லிம்களுக்குத் தனியான ஆட்சி அலகு தேவை என்ற முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு குறித்தும் இன்னும் முழுமையான கருத்திணக்கம் இல்லை. அது சம்பந்தமாகத் தமிழ், சிங்களத் தரப்புகளின் தீர்க்கமான முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

அரசின் மூல யோசனைகளை பௌத்த மத பீடங்கள் எதிர்த்ததால், தீர்வுத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு உரு மாற்றப்பட்டது. தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையில் கருத்திணக்கம் காணப்படும் பட்சத்தில் மகா சங்கத்தினரின் எதிர்ப்பு வழமை போலப் பெரும் தடைக் கல்லாக நிற்கும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசுவது; போரை நிறுத்துவது; என்பவற்றிலும் தீர்க்கமான முடிவு இன்னும் இல்லை.

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் குறித்துச் சாடை மாடையாகப் பேசப்பட்டிருக்கின்றதே அன்றி, அது செயலுருப் பெற எத்தனையோ தடைகள் வரலாம்.

இத்தடைகளை அரசாங்கமும் உணர்கிறது என்பதனையே அமைச்சரின் அமெரிக்கப் பேச்சு மறைமுகமாக உணர்த்துகிறது. இத்தனை தடங்கல்கள், தடைகளைத் தாண்டி தீர்வு ஒன்றைக் கொண்டுவர முடியுமா என்ற சந்தேகம் அமைச்சருக்கு மட்டுமன்றி மக்களுக்கும் உண்டு. ஆனால் தடைகளைத் தாண்டுவதாகக் கூறி எவ்வளவு காலம் கழியப் போகிறது?

தடைகளைத் தாண்டி நியாயமான தீர்வு ஒன்றைக் காணும் மனோதிடமும், சக்தியும், இலட்சிய நோக்கும் அரசுக்கு இருக்குமானால் அது நாட்டுக்கு நல்லதாக அமையும்.

### தமது கோரிக்கையை வலியுறுத்தி

# பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பர்

கொழும்பு, ஒக்.5

தமது கோரிக்கைகளை முன்வைத்து பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் கொழும்பு பத்தரமுல்லலையில் உள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சு வளாகத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் என அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த உண்ணாவிரதத்தில் 5 ஆயிரம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பங்கு பற்ற உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பட்டதாரி ஆசிரியர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் —

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பிரச்சினை அரசினால் தட்டிக் கழிக்கப்பட்டுள்ளது என்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஜி சீ ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த பட்டதாரி ஆசிரியர்கள் மறுத்ததும் -

இதனை அடுத்து அரசு அவர்களின் கோரிக்கைகளை ஏற்க இணங்கியதும் தெரிந்ததே.

தற்போது ஜி சீ ஈ உயர் தரப்பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணி பட்டதாரி ஆசிரியர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கேரதீவில் துப்பாக்கிச் சூடு; இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்.ஒக்,5

தென்மராட்சிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கேரதீவுப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மறவன் புலோவைச் சேர்ந்த சுப்பிரமணியம் நகுலராசா (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஆ-15)

## தண்டனை

கடந்த புதன்கிழமை பிற்பகலில் யாழ். கே. கே. எஸ் வீதி நாச்சிமார்கோவிலடிப் பகுதியில் ஒருவர் மின்சாரக் கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொடிகாமப் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ என்ற இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது.

காட்டிக் கொடுத்தமைக்காக புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நோட்டீஸ்கள் அருகில் காணப்பட்டன. (உ-145)

## நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஒக். 5

1987 ஒக்ரோபர் 5 ஆம் திகதி பலாலி இராணுவத் தளத்தில் வைத்து சயனைட் உட்கொண்டு மரணித்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு விடுதலைப் புலிகளின் நினைவு தினம் இன்றாகும்.

அதனை ஒட்டி இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசங்களில் முக்கிய சந்திகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு, விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு பன்னிருவரின் படங்களை வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன. [அ-உ]

## 2 ஆசிரியருடன் இயங்கும் பாடசாலை

செம்பியன்பற்று ஒக். 5

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள மாமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இரண்டு ஆசிரியர்களுடன் மட்டும் இயங்கிவருகிறது.

(இ-36)

## நகைக்கடை குண்டுவெடிப்பு தெற்கில் இருவர் பலி!

கொழும்பு, ஒக். 5

மீரிகம ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள நகைக் கடை ஒன்றில் குண்டு ஒன்று நேற்று வெடித்ததாக அறிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கான காரணத்தை அறிந்து கொள்ள மீரிகம பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மீரிகம பொலீஸ் பொறுப்பதிகாரி ஜயந்த பண்டார தெரிவித்த தகவலில் சம்பவ தினம் இந்தக்கடைச் சொந்தக்காரருக்கும் அவரது சகோதரருக்கும் நன்கு பழக்கமான இளைஞன் ஒருவன் கடைக்கு சென்றிருந்தான்.

இந்த இளைஞன் கடைச் சொந்தக்காரரின் சகோதரனுடன் கதைத்துவிட்டு புறப்பட இருந்த சமயம் இந்தக் குண்டுவெடிப்பு இடம் பெற்றது. இந்த இளைஞனும் கடைச் சொந்தக்காரருமே தமக்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாக இறந்தனர்.

கடைச் சொந்தக்காரர் ஒரு முஸ்லிம் ஆவார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# தீவுப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் எமது நிர்வாகம் இல்லை

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதிகள் மட்டுமே தற்போது எமது நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. யாழ்.மாவட்டத்தில் தீவுப்பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் எமது நிர்வாகத் தொடர்புகள் எதுவும் கிடையாது என்பதை தமிழ்மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போர் மேகம் சூழ்ந்துள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எமது மக்கள் அன்றாடம் முகம் கொடுக்கும் வேதனை மிகுந்த சூழ்நிலையை நாம் நன்கு அறிவோம். எமது மக்கள் ஈடு செய்ய முடியாத பொருளாதார இழப்புக்களையும்—

ஈடு இணையற்ற உயிர் இழப்புக்களையும்— சந்தித்து வேதனைகளையும் குமுறல்களையும் சுமந்து கொண்டு வர்ழ்ந்து வருகின்றனர் என்பது நாம் அறிந்ததே.

எம்மைப்பற்றி மிகவும் அருவருக்கத்தக்க விஷமத்தனமான பிரசாரங்கள் எமது மக்கள் மத்தியில் மிகக் கேவலமான முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டமை எமது மக்கள் அனைவரும் நன்கு அறிந்த விடயம்.

ஆனால் இவைகளைக் கண்டு நாம் ஒருபோதும் சோர்ந்து போகவில்லை; மாறாக உறுதி பூண்டோம்; பொறுமையைக் கடைப்பிடித்தோம்.

எமது மக்களின் அரசியல் சுயநிர்ணய உரிமை என்கின்ற கௌரவமான ஓர் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு பரிசுத்தமான வேலையை எமது மக்களுக்கு நாம் உண்மையான தியாக உணர்வுடன் செய்ய, நிச்சயம் காலம் ஒரு சந்தர்ப்பத்தை எமக்கு வழங்கும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு உண்டு.

தற்போது யாழ் மாவட்டத்தில் எமது நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளான வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, காரைநகர், நெடுந்தீவு போன்ற பகுதிகளில் மட்டுமே எமது நேரடி நிர்வாகத் தொடர்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதைத் தவிர்ந்த யாழ்.மாவட்டத்தில் எமது நிர்வாகத் தொடர்புகள் எந்தப் பகுதிகளிலும் இல்லை என்பதனை மிக மிகத் தெளிவாக எமது மக்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இந்தத் தகவலை மீண்டும் மீண்டும் ஏன் எமது மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம் என்றால், யாழ். மாவட்டத்தில் எமது நிர்வாகத் தொடர்புகள் இல்லாத பகுதிகளில் அடையாளந் தெரியாத சில ஆயுதம் ஏந்தியவர்கள் பயமுறுத்தல், ஆள் கடத்தல் போன்ற வன்முறைச் செயல்களைப் புரிந்துவிட்டு எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பாவித்து ஸ்தாபனத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்; மக்கள் மத்தியில் எமது ஸ்தாபனத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படுகின்றனர்.

இப்படியான வேலைகள் எம்மால் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கின்றோம். தொடர்ந்து இதுபோன்ற அசம்பாவிதங்கள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி நடந்தால் குறிப்பாக ஆள் கடத்தல் போன்ற செயல்களை மேற்கொள்ளும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தகுந்த ஆதாரத்துடன் எமது ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையக அரசியல் பணிமனை ஊர்காவற்றுறையில் உள்ள கரம்பொன் மேற்கில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

## துறைமுக அதிகாரசபையிடம் காங்கேசன் நிர்வாகம்

பலாலி, ஒக். 5

காங்கேசன் துறைமுக நிர்வாகம் துறைமுக அதிகாரசபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

உதவி அதிகாரிகளும் பயிற்றப்பட்ட ஊழியர்களும் தற்போது காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பயிற்றப்படாத ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் அப்பகுதியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என துறைமுக அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுவரை கடற்படையினரின் பாதுகாப்பின் கீழ், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் வடபகுதி மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் இத்துறைமுகம் ஊடாக அனுப்பப்பட்டு வந்தன.

(இ-10)

## நாளை

புரட்டாதி 20
ஞாயிற்றுக்கிழமை
திதி: நவமி
முற்பகல் 10 47 வரை.
நட்சத்திரம்: பூசம்
திங்கள் காலை 5.58 வரை
ராகுகாலம்: 4.32—6.02
சுப நேரம்: 9.02—10 32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மருதானையில் ரயில் மறிப்பு போராட்டம்

கொழும்பு, ஒக். 5

மருதானை ரயில் நிலையத்தில்கடந்த புதனன்று ஆயிரக் கணக்கான பயணிகள் ரயில் பாதையில் அமர்ந்து ரயில் மறிப்புப் போராட்டம் நடத்தினர்.

இதனால் 2மணி நேரம் அப் பாதையில் ரயில் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.

ரயில்களுக்கு மேலதிக பெட்டிகள் பொருத்தப்பட வேண்டும் என்று கோரியே இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. (இ-10)

## கிழிந்த நோட்டுகள்

வடமராட்சி, ஒக்.5

குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் கிழிந்த, அழிந்த, கரன்ஸி நோட்டுகள் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

முன்னர் இந்நோட்டுகளை வங்கிகள் ஏற்காமையினால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாக நேர்ந்தது.

இதேவேளை குடாநாட்டில் சில்லறை நாணயங்கள் தேங்கியுள்ளன. இவற்றை வங்கிகள் பெருந் தொகையாக ஏற்க மறுத்து வருவதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ-173)

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில்

# புனர் நிர்மாணப் பணிகளுக்கு நிதி வழங்க பல நாடுகள் விருப்பம்

கொழும்பு, ஒக. 5

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளை புனர் நிர்மாணம் செய்வதற்குத் தேவையான நிதி உதவியை வழங்க பல நாடுகள் முன்வந்துள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஒருங்கிணைப்பு புனர்வாழ்வுத் திட்டத்துக்கென இரண்டு கோடி அமெரிக்க டொலரை வழங்க சுவிட்சர்லாந்து அரசு முன்வந்துள்ளது.

சுகாதார வசதிகளை அளிப்பதற்கும், கிளிநொச்சியில் சிறு ஆஸ்பத்திரி ஒன்றை நிர்மாணிப்பதற்கும் இந்தப் பணம் பயன் படுத்தப்படும்.

இது தொடர்பாக சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நிபுணர் குழு ஒன்றும் அடுத்த மாதம் கொழும்பு வரவிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பிக்கவும் —

கால் நடை வளர்ப்பை ஊக்குவிக்கவும் — மூன்று கோடி டொலரை வழங்க நோர்வே அரசு இணங்கியுள்ளது

பிரிட்டிஷ் அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் ஜெனரேட்டர்களை அன்பளிப்புச் செய்வதென தீர்மானித்துள்ளது.

கிளிநொச்சியில் மீள் குடியேற்றத்துக்கும் பிரிட்டன் உதவ விருக்கிறது.

ஜப்பானிய அரசாங்கம் இடம் பெயர்ந்த குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக அதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஊடாக 10 லட்சம் அமெரிக்க டொலரை அன்பளிப்புச் செய்துள்ளது.

(இ-3)

## ஆசிரியர் தினம் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 5

உலக ஆசிரியர் தினம் நாளையாகும்.

குடா நாட்டில் அனேகமாக எல்லாப் பாடசாலைகளிலும் ஆசிரியர் தின விழாவை ஒட்டி விசேட நிகழ்ச்சிகள் நாளை நடைபெறவுள்ளன.

பல பாடசாலைகளில் இப்போது பணிபுரியும் ஆசிரியர்களுடன், இளைப்பாறிய அதிபர்கள், ஆசிரியர்களும் கௌரவிக்கப்படுவர்,

நாளைய உலக ஆசிரியர் நிகழ்வுகளில் விசேட சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழையமாணவர் சங்கங்கள் நலன்விரும்பிகள் சேர்ந்து ஆசிரியர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாக்களைஏற்பாடு செய்துள்ளன. (அ)

## வடக்கு கிழக்கில் 300 பெண் கான்ஸ்டபிள்கள்

கொழும்பு, ஒக். 5

வடக்கு - கிழக்கு பொலீஸ் நிலையங்களில் கடமையாற்ற 300 றிசேவ் பெண் கான்ஸ்டபிள்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கில் கட்டாயம் கடமையாற்ற வேண்டும் என்ற ஒப்பந்த அடிப்படையிலேயே இவர்கள் புதிதாகச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். (இ-3)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த 27 ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து நற்கருணைப் பவனியும் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 30 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து செபமாலை அன்னையின் திருச்சொரூப ரத பவனி இடம்பெறும். (அ-30)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நாடு நலம் பெற வேண்டியும் மக்கள் நிம்மதியுடன் வாழ வேண்டியும் விசேட பிரார்த்தனைகளும் பஜனைகளும் நடைபெற்று வருகின்றன.

நண்பகல் பூசையைத் தொடர்ந்து, பி. ப. 1 மணி தொடக்கம் 3 மணிவரை இப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. (அ-30

## ஆப்கானில் மருத்துவமனை பாதிப்பு

காபூல், ஒக் 5

ஆப்கானிஸ்தானில் பெண்கள் வேலைக்குச் செல்லக் கூடாது என தலிபான் படையினர் உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து பெண் மருத்துவர்களும், தாதிகளும் பணிக்குச் செல்லாததால் மருத்துவமனைகளில் பணிகள் பாதிக்கப் பட்டுள்ளன

ராவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்ததே.

வி.பி. சிங் பிரதமராக இருந்த சமயம் அவருக்கும், அவரது மகனுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் வி,பி. சிங்கின் மகனின் பெயரில் செயின் கீட்ஸ் வங்கியில் பல கோடி டொலர் வைப்புத் தொகை இருப்பதாகத் தெரிவிக்கும் போலி ஆவணம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டதாகக் கூறப்படும் வழக்கிலேயே மாஜிஸ்திரேட் நீதி மன்றம் நேற்று மேற்படி உத்தரவுகளை விடுத்தது.

(உ 3)

ஓர் ஓட்டத்தினால்

# இறுதிப் போட்டியில் ஆடும் தகுதியை இலங்கை இழப்பு

தற்போது கென்யா நாட்டில் நடைபெற்று வரும் நான்கு நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் தகுதியை ஸ்ரீலங்கா அணி ஓர் ஓட்டத்தால் இழந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 371 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலளித்து ஆடிய ஸ்ரீலங்கா அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது

இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றதால் அது விளையாடிய 3 போட்டிகளில் 2 இல் வெற்றிபெற்று 4 புள்ளிகளை எடுத்தது. இருப்பினும் ஸ்ரீலங்கா தென் ஆபிரிக்க அணிகளும் தாங்கள் விளையாடிய 3 போட்டிகளில் தலா இரு போட்டிகளில் வென்று ஏற்கனவே 4 புள்ளிகளை எடுத்துள்ளன.

தென் ஆபிரிக்கா அணி தான் விளையாடிய போட்டிகளில் பெற்ற ஓட்ட வேகத்தால் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை ஏற்கனவே பெற்றுவிட்டது.

நேற்றைய போட்டியில் ஸ்ரீலங்கா அணி தோற்க நேரிடினும் 290 ஓட்டங்களைப் பெற்றிருந்தால் ஓட்ட வேகத்தால் இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்க அணியுடன் மோதும் வாய்ப்பைப் பெற்றிருக்கும்.

ஆனால் ஸ்ரீலங்கா அணி ஒரே ஒரு பந்து வீச இருக்கையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 289 ஓட்டங்களையே பெற்றது இதனால் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை இழந்துள்ளது.

ஸ்ரீலங்கா அணியின் சார்பில் அரவிந்த டி சில்வா 102 ஓட்டங்களையும் அர்ஜுனா ரணதுங்கா, குமார் தர்மசேனா ஆகியோர் தலா 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

# தமிழ் அமைப்புகளின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாடு மீதான படையெடுப்பு

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் பெரும் படையெடுப்பை அரசுப் படைகள் மேற்கொள்வதற்கு சிறிது காலத்துக்கு முன்னர் நான் வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்றிருந்தேன். அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களையும், புலிகளின் ஆதரவாளர்களையும் — ஏன் புலிகள் பிரதிநிதிகளையும் கூட — சந்தித்து உரையாடினேன்.

அப்போது அரசுப் படைகள் பெரும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கப் போகின்றன என்ற உறுதியான தகவல்களை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன்.

அதைத் தவிர்க்கச் செய்ய முடியும் என்றும் —

அதற்கு முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயற்பட முன் வருவது அவசியம் என்றும்—

நான் அவர்களுக்கு எடுத்து விளக்கினேன்.

முதலில் சகோதரப் படுகொலைகளை நிறுத்த புலிகள் முன் வர வேண்டும்; தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்பட இணங்கவேண்டும். இவை பற்றி புலிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று நான் கோரினேன்.

அப்படிச் செய்தால்—

யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கையை நிறுத்தச் செய்யக் கூடிய உறுதியான முயற்சிகளை நான் எடுப்பேன் என்று சொன்னேன்; எனது இக் கோரிக்கைக்கு ஆதரவாக ஐம்பதுக்கும் குறையாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அப்போது இலகுவாக என்னால் திரட்டக் கூடியதாக இருந்திருக்கும். அதனைப் பயன்படுத்தி அந்தப்படையெடுப்பை நிறுத்தச் செய்திருப்பேன்.

ஆனால் தற்போது காலம் கடந்து விட்டது இனிமேலும் காலம் கடத்தாமல் நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

பிரச்சினைகள் வரும்போது அனைத்துக் கட்சிகளுமே— தமிழர் விடுதலைக் கூட்டணி முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் வரை—அனைத்துமே மக்களை விட்டு விட்டு ஓடி விடுகின்றன. இதில் ஈ.பி. டி.பி., ஈ.பி ஆர்.எல்.எவ். என்று எந்தக் கட்சியும் மிச்சமில்லை.

ஐக்கியம் இருந்திருப்பின்

ஈழத் தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்திய— இலங்கை ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பாக இருந்தது ஆனால் ஈ.பி.ஆர். எல்.எவ், தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற இயக்கங்களும் — நாங்களும் உட்பட அந்தச் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு விட்டோம்.

அந்த நேரத்தில் ஈ.பி.ஆர். எல்.எவ்வும் விடுதலைப் புலிகளும் ஐக்கியப்பட்டு தங்களைக் கட்டுப்படுத்தி, விட்டுக் கொடுத்து செயற்பட்டிருந்தால் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஓரளவேனும் தீர்வு கண்டிருக்க முடியும்.

அப்போது ஐக்கியப்பட்டு விட்டுக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்கள், ஆளை ஆள் வெட்டிக் கொத்த முயன்றார்கள்.

ஈ. பி. ஆர். எல். எவ் வின் தூரப் பார்வை குறித்து எமக்கு முரண்பாடு இல்லை. ஆனால் அவர்கள் கட்டுக்கோப்பான — பலமான — அமைப்பாகச் செயற்படவில்லை.

இதற்கு மாறாக புலிகள் கட்டுக்கோப்பான அமைப்பாக — அசுர பலமுடைய இயக்கமாக — உள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு பிரச்சினைகள் குறித்துத் தூரப் பார்வை கிடையாது.

தமிழ் அமைப்புகள் நெல்லிக்காய் மூடை போல் சிதறாமல் இருப்பதற்கு முதற்படியாகவே ஐந்து கட்சி கூட்டணியை அமைத்தோம். எல்லாப் பிரச்சினைகளிலும் விட்டுக் கொடுத்து — இணங்கி — செயற்பட இசைந்து, அதன்படி இயங்குகின்றோம். இதனை அனைத்துத் தமிழ் அமைப்புகளையும் சேர்த்து ஐக்கிய முன்னணியாக மாற்றினால் நாம் முழு வெற்றி பெற முடியும்.

யாழ். நிலைமை

யாழ்ப்பாண மக்கள் இன்று அனுபவிக்கும் நெருக்கடிகள் கவலை தருகின்றன.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை பாஸிஸ போக்கு என்று விமர்சித்துக்கொண்டு—

சட்ட ரீதியிலான அரசின் படைகளும் அத்தகைய பணியிலான செயற்பாடுகளைச் செய்யுமாயின் அதனை ஏற்கவும் முடியாது; நியாயப்படுத்தவும் முடியாது

அப்பாவி மக்களின் மனித உரிமைகள் மீறப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தை அரசு கைப்பற்றியதும் இந்த விடயத்தில் உதவுவதற்கு நாம் தயாராக இருப்பதாக அரசுக்குத் தெரிவித்தோம். ஆனால் அரசு வாய்ப்பளிக்கவில்லை. சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விட்டது. இப்போது நிலைமை மோசமாகும் போது எமக்கு அழைப்பு வருகின்றது.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ)


## இன்று சனிக்கிழமை...

அடுத்த சனிக்கிழமை பெற்றோருக்கும் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கும் முக்கிய நாள்...

போலியோவிலிருந்து குழந்தைகளைக் காப்பதற்காக சொட்டுமருந்து ஊட்டப்படும் நாள்...

மறந்துவிடாதீர்கள்

இம்மாதம் 12 ஆம் திகதியை

PolioPlus

குழந்தைகள் நலனே எதிர்கால சுபீட்சம்

ROTARY INTERNATIONAL


## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராசா மனோலயம் (பேபி)

சித்தன்கேணியைச் சேர்ந்த செல்வராசா மனோலயம் (பேபி) 02 - 10 - 96 புதன்கிழமை காலமானார்.

இவர் மாணிக்கம் செல்வராசாவின் (ஊர்காவற்றுறை பிரதேச சபை) அன்பு மனைவியும், பா. காஞ்சனாவின் பாசமிகு தாயாரும், பா. பாலேந்திராவின் (பாபு) அன்பு மாமியும் விஷ்ணுதரனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03 - 10 - 96 வியாழக்கிழமை சித்தன்கேணியில் நடைபெற்றன.

தகவல்:
மா. செல்வராசா
(கணவன்)

சித்தன்கேணி மேற்கு,
சித்தன்கேணி.

[43013]

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்


சிங்கள வகுப்பு

பிரிவு - II ஆரம்பம்

06-10-96

ஞாயிறு - 2 00 மணி

அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

D. M. I.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(43019)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 05-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.